# நறுமணப் பயிர்களுக்கான உர அட்டவணை

**சிட்ரோனல்லா**

ஒரு எக்டருக்கு 10 டன் மக்கிய தொழு உரம் இட்டு நன்கு பண்படுத்தவேண்டும்.

அடியுரம்: ஒரு எக்டருக்கு 25:40:40 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து.

மேலுரம்: ஒரு எக்டருக்கு தழைச்சத்து 75 கிலோவினை சரிபாகமாக (25 கிலோ) பிரித்து நடவு செய்த 3,6 மற்றும் 9 மாதத்தில் இடவேண்டும்.

**ஜெரேனியம்**

ஒரு எக்டருக்கு 25 டன் மக்கிய தொழு உரம் மற்றும் 25:150:100 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை அடியுரமாக இடவேண்டும். மேலுரமாக ஒரு எக்டருக்கு 125 கிலோ தழைச்சத்தினை 5 சரிபாகமாக (25 கிலோ) பிரித்து 2 மாத இடைவெளியில் அளிக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் ஜுன் - ஜுலை மாதங்களில் எக்டருக்கு 20 கிலோ துத்தநாக சல்ஃபேட்டு மற்றும் 10 கிலோ போராானை அளித்து மகசூலை அதிகரிக்கலாம்.

**எலுமிச்சைப்புல்**

ஒரு எக்டருக்கு 20-25 டன் மக்கிய தொழு உரம் இட்டு நன்கு பண்படுத்தவேண்டும். 50 கிலோ தழைச்சத்து உரத்தை முதல் பாதியை நடவின்போதும் மீதியுள்ள உரத்தை நடவு செய்த ஒரு மாதம் கழித்தும் இடவேண்டும். இரண்டாம் வருடத்தில் அறுவடையின் பின்பும் மற்றும் அறுவடைக்கு ஒரு மாதம் கழித்தும் தழைச்சத்து உரத்தினை இடவேண்டும்.

**புதினா**

அடியுரமாக ஒரு எக்டருக்கு 50:75:50 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்து இடவேண்டும். நடவு செய்த 4 மாதங்கள் கழித்து ஒரு எக்டருக்கு 25 கிலோ தழைச்சத்தை இடவேண்டும்.

**பால்மரோசா**

ஒரு எக்டருக்கு அடியுரமாக 10 டன் தொழு உரம் மற்றும் 20:50:40 கிலோ தழை, மணி, மற்றும் சாம்பல் சத்து இடவேண்டும். மேலும் நடவு செய்த 3, 6 மற்றும் 9வது மாதத்தில் ஒரு எக்டருக்கு 15 கிலோ தழைச்சத்து இடவேண்டும். ஒரு எக்டருக்கு 25 கிலோ துத்தநாக சல்ஃபேட்டு அளித்து மகசூலை அதிகரிக்கலாம்.

**பச்சோலி**

ஒரு எக்டருக்கு 15 டன் மக்கிய தொழு உரம் மற்றும் 25:50:50 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை அடியுரமாக இடவேண்டும். மேலுரமாக ஒரு எக்டருக்கு 125 கிலோ தழைச்சத்தினை 5 சரிபாகமாக (25 கிலோ) பிரித்து ஒவ்வொரு அறுவடைக்குப் பின்னரும் அதாவது 4 மாத இடைவெளியில் அளிக்க வேண்டும்.